# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 8th September 1958.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker, THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

MR. SPEAKER : இன்றைய தினம் தொழில் துறை அமைச்சர் ஸ்ரீ ஆர். வெங்கட்டராமனும், ரெவின்யூ அமைச்சர் ஸ்ரீ எம். ஏ. மாணிக்க வேலு அவர்களும் சபையில் இல்லை. ஆதலால் அவர்களுடைய கேள்விகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளுகிறேன். அவற்றுக்குப் பதிலாக இன்றைய தினம் 20 கேள்விகள் கூடச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது கேள்வி 76-க்குப் பதில் அளிக்கப்படும்.

*Lady clerks in Government Departments*

* 76 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government propose to abolish the system of posting lady clerks or officers along with men clerks and post ladies alone in some sections of the Secretariat, Board of Revenue, Collectors' offices and other offices of Heads of Departments?

THE HON. SRI C. SUBRAMANIAM : The answer is in the negative.

SRI S. LAZAR : கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இப்போது எவ்வாறு கோ எஜுகேஷன் கொள்கை தவிர்க்கப்படுகிறதோ அம்மாதிரி சர்க்கார் நிலையங்களிலும் ஆண் குமாஸ்தாக்களும், பெண் குமாஸ்தாக்களும் சேர்ந்து வேலை செய்வது தவிர்க்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார் ; அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

SRI K. VINAYAKAM : Is it not a fact, Sir, that the presence of the very lady clerks in the office accelerates good work and very efficient work is turned out due to the presence of these clerks?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a leading question.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether there is any inconvenience felt in the present system of posting lady clerks along with men clerks?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have not heard of any complaints about it.

SRI K. ANBAZHAGAN : சிற்சில இடங்களில் பெண் குமாஸ்தாக்கள் நல்ல உடை உடுத்திக்கொண்டு வராத காரணத்தால் அருவருக்கத்தக்க சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றனவா ? குறிப்பாக கன்னிமாரா லைப்ரரியைப் பற்றி வந்திருக்கிறதா ?

[8th September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கே செக்ரடேரியட், போர்டு ஆப் ரெவின்யூ, கலெக்டர்ஸ் ஆபிஸ், இலாகா தலைமைக் காரியாலயங்கள் முதலியவற்றைப் பற்றிதான் கேள்வி. மேலும் எனக்கு எங்கிருந்தும் இதுவரை புகார் வரவில்லை.

## *Police Dogs*

* 77 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958 மார்ச் மாதத்தில் வட ஆற்காடு ஜில்லாவில், வேலூர், குடியாத்தம் நகரங்களுக்கு திருடு கண்டுபிடிப்பதற்காக போலீஸ் நாய்கள் அனுப்பிவைக்கப்பட்டனவா ?

(ஆ) அந்த நகரங்களில் திருடுபோன பொருள்களின் மதிப்பு எவ்வளவு ?

(இ) திருடுபோன பொருள்கள் யாவும் கண்டுபிடிக்கப்பட்டனவா ? திருடர்களும் கண்டு பிடிக்கப்பட்டனரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Rs. 14,400 in all.

(*c*) Properties worth Rs. 10,200 relating to the case of theft in Vellore have been recovered and the accused has been apprehended and convicted. There has been no recovery of property in the eft case at Gudiyatham as no clue is available.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister what principles the Government are following in the matter of sending these police dogs and is it the policy of the Government to send these dogs to aid investigation on application by the affected parties on payment of any money or not?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is not so. If the police require the services of these dogs for the purpose of investigation, these dogs are sent.

SRI P. S. CHINNADURAI : கோவை ஜில்லாவின் விசேஷ நிலைமையை உத்தேசித்து போலீஸ் நாய்களை அங்கே வைப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோவை மாவட்டத்தைப்பற்றி நான் அவ்வளவு குறைவாக நினைக்கவில்லை. எல்லா ஜில்லாக்களிலும் குற்றங்கள் நடைபெறுகின்றன. அப்போது எங்கே நாய்கள் தேவைப்படுகின்றனவோ அங்கே அனுப்பி வைக்கப்படுகின்றன.

SRI A. A. RASHEED : Will it not help the police to detect more crimes quickly if the dogs are on the spot immediately?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But it is not practicable to have many such dogs throughout the State. Whenever required, these dogs are sent as early as possible.

SRI K. B. S. MANI : இவ்வளவு உயர்தரமான வேலைகளுக்கு நாய்களைப் பழக்குகின்ற போலீஸ்காரருக்கு ஸ்பெஷல் அலவன்சு கொடுக்கப்படுகிறதா ? இல்லையென்றால் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி எத்தனையோ திறனுள்ள வேலைகள் செய்யப்படுகின்றன. அவைகளுக்குத் தக்கபடி கவனமும் செலுத்தப்படுகிறது.